St. Joseph's Journal of Humanities and Science (Volume 3 Issue 1 January 2016) 37-41

St. Joseph's Journal of Humanities and Science

ISSN: 2347-5331

http://sjctnc.edu.in/6107-2/



# பெரியாரின் பெண்ணிய சிந்தனைகள்

- **அ. கிரேஸி ஜெனோவா** *

## முன்னுரை

தொன்றுதொட்டு பெண்மையையும், தாய்மையையும் ஒருங்கே போற்றியநாடு நம்நாடு. அதன் இயற்கை எழிலையும், சிறப்பு இயல்புகளையும் நம் முன்னோர்கள் பெண்ணுருவில் கண்டு மகிழ்ந்து போற்றினார்கள். ஆனால் பெரியார் வாழ்ந்த காலத்தில் பெண் சமுதாயம் அடிமைத்தளையில் சிக்குண்டு, நடைபிணம் போல் வீட்டுச் சிறைக்குள் முடக்கப்பட்டுக் கிடந்தனர். சங்ககாலம் முதற்கொண்டே அரசியல், சமூக பண்பாட்டு அமைப்புகளின் காரணமாகப் பெண்கள் அடிமைப்படுத்தப்பட்டனர். அறிவும், நல்லறமும் வீரசுதந்திர உணர்ச்சியும் பெண்களுக்கு வேண்டிய குணங்கள். "ஆவதும் பெண்ணாலே" என்பது பழமொழி. ஆகவே பெண்கள் இத்தகைய குணம் கொண்டிருப்பது நாட்டிற்கு நன்மை விளைவிக்கும் என்ற கருத்தில் இவ்வாறு கூறியுள்ளார் பெரியார். இதைத் தவிர பெண்கல்வி, பெண்சுதந்திரம், பெண்கள் சமஉரிமை, விதவை மறுமணம் இவையாவற்றையும் பெண்களுக்கு ஏற்றம் தரும் வகையாக மொழிந்து பெண்ணின் பெருமையும் பெண் குணத்தையும், பெண் விடுதலையையும், பெண்களுக்கு சொத்துரிமையும், ஆணுக்குப் பெண் சரிநிகர் என்பதையும் எவ்வாறு எடுத்து மொழிகின்றார் என்பதையும், அவ்வாறு கூற காரணமாக அமைந்த சூழலையும் ஆராய்வதே இக்கட்டுறையின் நோக்கமாகும்.

## கற்பொழுக்கம்

கற்பு என்னும் தமிழ்ச்சொல்லுக்கான விளக்கம் தமிழ் இலக்கணம், இலக்கியம் ஆகியவற்றில் உள்ளவாறு அறியப்படுதல் நல்லது.

**"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்**

**கொளற்குரி மரபிற் கிழவன் கிழ்த்தியைக்**

**கொடைக்குரி மரபினோர் கொடுப்புக் கொள்வதுவே"**

என்பது தொல்காப்பியம்.

இதன் பொருள், கிழத்தியாக - துணைவியாக ஒருத்தியைக் கொள்ளுவதற்கு உரிய கிழவன், பெண் கொடுக்க உரிய மரபினரிடத்துப் பெண் கேட்டு, அவர்களால் கொடுக்கப்பட்டுத் திருமண நிகழ்ச்சியை நடத்தி கொள்ளுவதே கற்பு என்பதாம். இது 'கற்பொழுக்கம்' என்கிற திருமணவகையை மட்டுமே குறித்ததாகும்.

* உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, தூய வளனார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), கடலூர்-1.

கைப்பேசி: 9789556824, மின்னஞ்சல்: janodomnic@gmail.com

'கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை' என்கின்ற வாக்கியப் படிப்பார்த்தால் 'கற்பு' என்பது சொல் தவறாமை - அதாவது, நாணயம், சத்தியம், ஒப்பந்தத்திற்கு விரோதமில்லாமல் நடப்பது என்கின்ற கருத்துக்களை கொண்டதாக இருக்கின்றது. ஆரிய மொழியில் 'கற்பு' என்பதற்கு 'பதிவிரதை' என்கின்ற பொருள் கொள்ளப்படுகின்றது. இந்த இடத்தில் தான் கற்பு என்கின்ற வார்த்தைக்கு அடிமைக்கருத்து நுழைக்கப்படுகின்றது என்பது ஈ.வெ.இரா அவர்களின் அபிப்பிராயம். அதாவது - பதியைக் கடவுளாகக் கொண்டவள். பதிக்கு அடிமையாய் இருப்பதையே விரதமாகக் கொண்டவள், பதியைத் தவிர வேறு யாரையும் கருதாதவள் எனப் பொருள் கொடுத்திருப்பதுடன், 'பதி' என்ற வார்த்தைக்கு அதிகாரி, எஜமான், தலைவன் என்கின்ற பொருள்கள் இருப்பதனால் அடிமைத்தன்மையை இவ்வார்த்தைகள் பலப்படுத்துகின்றன. 'ஒரு பிறப்புக்கொரு நீதி' வழங்கும் நிர்பந்த கற்பு முறையொழிந்து, இரு பிறப்பிற்கும் சமமான சுயேச்சை கற்பு முறை ஏற்பட வேண்டும் என்பது பெரியார் அவர்களின் குறிக்கோள் ஆகும். கற்புக்காக ஆணின் மிருகச் செயலைப் பொறுத்துக் கொண்டிருக்க வேண்டுமென்கின்ற கொடுமையான மதங்கள், சட்டங்கள் மாய வேண்டும். கற்புக்காக மனத்துள் தோன்றும் உண்மையன்பை, 'காதலை மறைத்துக் கொண்டு காதலும் அன்புமில்லாதவனுடன் இருக்க வேண்டும் என்கின்ற, சமூகக் கொடுமையும் அழிய வேண்டும்' என சூளுரைக்கிறார். எனவே, 'இக்கொடுமைகள் நீங்கின இடத்தில் மாத்திரமே மக்கள் பிறவியில் உண்மைக்கற்பை இயற்கை கற்பை - சுதந்திரக் கற்பை காணலாமொழிய நிர்பந்தங்களாலும் - ஒரு பிறப்புக்கொரு நீதியாலும் - வலிமை கொண்டவன், வலிமையற்றவனுக்கு எழுதி வைத்த தர்மத்தாலும் ஒருக்காலும் காண முடியாது. அன்றியும் இம்மாதிரியான கொடுமையை விட வெறுக்கத்தக்க காரியம் மனித சமூகத்தில் வேறொன்று இருப்பதாக என்னால் சொல்ல முடியாது (பெரியார் ஈ.வெ.இரா. சிந்தனைகள். பக்.115) என கூறுகிறார்.

**"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்**

**திண்மையுண் டாகப் பெறின்" (குறள் 54)**

என வரும் குறளில் 'கற்பு என்னும் திண்மை' உடையவளாக ஒரு பெண் இருப்பாளானால் கணவனுக்கு அப்படிப்பட்ட பெண்ணைவிடப் பெருமை உடையது யாதுமே இல்லை எனக் குறிப்பிடப்படுகிறது.

'கற்பு என்பது சுகாதாரத்தையும், சரீரத்தையும், பொது ஒழுக்கத்தையும் பொறுத்தது' என்பது பெரியாரின் சீரிய கருத்தாகும். ஆனால் இன்று அந்த முறையில் கற்பு கையாளப்படுவதில்லை. கற்பு என்பது பெண்கள் மீது மாத்திரம் சுமத்தப்பட்டிருக்கிறது. ஆண்களுக்கு வலியுறுத்தப்படவில்லை.

## கைம்பெண் மறுமணம்

கணவனை இழந்த ஒரு பெண் மறுமணம் செய்து கொள்வது ஏற்புடையது அல்ல என்ற கொள்கை அதர்வண வேத காலம் தொட்டு இங்கே வளர்க்கப்பட்டது. (அதர்வண வேதம் 9,5,279). இப்படிப்பட்ட இந்திய சமூகத்தில் கைம்பெண் ஒருத்தி எவ்வளவு கொடுமைக்கு எத்தனைப் பெரிய நம்பிக்கை இழப்புக்கு ஆளாகித் தவிக்கிறாள் என்பதை நேரிடையாக தம் குடும்பத்திலேயே ஈ.வெ.இரா. கண்டார்; மனம் நொந்தார்; கைம்பெண்ணுக்கு நேரும் கொடுமையை நீக்கியே தீரவேண்டும் என்று அன்றே உறுதிபூண்டார்.

**"விதவைகளின் விசயம் நினைவிற்கு வரும் போது நேரில் காண நேரும் போது 'உலக இயற்கை, எளியாரை வலியார் அடக்கி ஆண்டு இம்சிப்பதல்லாமல் வேறல்ல என்றே முடிவு செய்வேன்"** ('குடி அரசு' 22.8.1926; பெரியார் ஈ.வெ.இரா.சிந்தனைகள், பக.135.136).

அத்துடன் விதவைத் திருமணம் கூடாது என்பது பெரும்பாலும் மேல்சாதிக்காரரிடமே நிலவி இருந்தது. கீழ்ச்சாதிக்காரர்களிடமும், உழைப்பாளிச் சாதிகளிடமும் அது இல்லை என்பதையும் சுட்டிக் காட்டினார்.

கணவனை இழந்த பெண்ணை 'விதவை' என்று அழைக்கிறார். ஆனால் மனைவியை இழந்த கணவனை 'விதவன்' என்று அழைப்பதில்லை. இதுவே பெண்ணைவிட ஆணை உயர்த்திக்காட்டுவதாகும் என எண்ணினார். உலகில் இந்தியாவைத் தவிர வேறு எந்த நாட்டிலும் - எந்த மதத்திலும் விதவை

மணம் ஒப்புக் கொள்ளப்படுகின்றது. விதவைத் தன்மையை அனுமதிக்கும் சமூகம் மற்றொரு விதத்தில் விபச்சாரத்தனத்தை தூண்டவும் அனுமதிக்கவும் செய்கின்ற சமூகம் என்றுதான் சொல்ல வேண்டும். (காரைக்குடியில் 19.4.1935இல் சொற்பொழிவு; 'குடி அரசு' 28.4.1935) என கூறுகிறார்.

## குழந்தை மணம்

இந்தியாவில் குழந்தையாக உள்ள பெண்களை மணம் செய்து தரும் வழக்கம் ஏறக்குறைய கி.மு. 4ஆம் நூற்றாண்டில் தொடங்கியது. அதனால் பெண்கள் கல்வி பெறும் வாய்ப்பு இயல்பாகவே தடுக்கப்பட்டது. குழந்தை மணத்தால் அமைந்த பெருங்கேடுகளுள் இது தலையானது. எனவே, பெண்களில் பெரும்பாலோர் கல்வியறிவு அற்றவர்களாகவே மாறி வந்தனர்.

பெண் விடுதலையில் அக்கறையுள்ள ஒவ்வொருவரின் சிந்தனையையும் துண்டுவதற்காக உலகில் மனித வர்க்கத்திற்கு அடிமைத் தத்துவம் ஒழிய வேண்டுமானால் பெண்ணுலகை அடிமையாகக் கருதி நடத்தும் அகம்பாவமும், கொடுமையும் ஒழிய வேண்டும். இது ஒழிந்த நிலையே சமத்துவம், சுதந்திரம் என்னும் முளை முளைக்கும் இடம் ('குடி அரசு' 12.8.1926) எனக் கூறியுள்ளார்.

## மணவிலக்கு உரிமை

**"கலியாண இரத்துக்கு இடமில்லாத காரணத்தினாலேயே ஆண்கள் மனைவிமார்களிடத்தில் மனிதத் தன்மையோடு நடந்து கொள்ளாமல் மிருகத்தனமாய் நடக்கத் தூண்டபடுகிறார்கள்"**

என்பது ஈ.வெ.இரா.வின் கூற்றாகும்.

மணவிலக்குக் கூடாது என்பதற்கு மிகவும் கெட்டியான அடித்தளமாக இருப்பது, 'திருமணம் ஒரு புனிதச் சடங்கு' என்கிற கோட்பாடேயாகும். இதை நம்பிய காரணத்தினால் தான் சமூகமும், பெண்களும் மேலே கண்ட கொடுமையான தன்மைகளை எதிர்த்துப் போராட முன்வரவில்லை. இத்தன்மை மேல்சாதியினரிடையே அன்றும் இன்றும் கொடூரமான வடிவில் உள்ளது. மனைவிமார்களைத் தங்களுக்கு பிடிக்கவில்லையானால் ஆண்கள், மறுபடியும் மணம் செய்துக் கொள்கிறார்கள். இத்தகைய நிலை முற்றிவிட்ட சமூகத்தில் பெண்களுக்கு மணவிலக்கு உரிமை இன்றியமையாதது என்றுரைக்கிறார். விவாகரத்து சட்டமாவது பெண்கள் சமூகத்திற்கு ஓர் பாதுகாப்புக் கருவி என்பதே பெரியாரது முடிவான அபிப்பிராயம். கணவனுக்கும் மனைவிக்கும் பரஸ்பர அன்பும், சமமான வாழ்க்கையும் ஏற்பட வேண்டுமானால் இருவருக்கும் தனித்தனியாக உரிமை இருந்தால்தான் முடியும். ஆகவே, இந்த உரிமையைப் பெண்களுக்கும் அளிக்க வேண்டியது நியாயமும் ஆகும் என்பது பெரியாரின் கருத்தாகும்.

இவ்வளவு தடைகளையும் தாண்டி, 1955இல் நிறைவேற்றப்பட்ட இந்துச் சட்டத்திருத்த மசோதாவின்படி மணவிலக்கு உரிமை இந்துப் பெண்களுக்குக் கிடைத்தது என்பது அறியத்தக்கது. விதவைகள் மறுமணம் செய்து கொள்வதற்கு சட்டத்தில் இடமிருந்தாலும் கல்வி அறிவு அற்ற பெற்றோர்களும், கல்வி அறிவு அற்ற விதவைகளும் சாதிகட்டுபாட்டிற்கு அஞ்சி விதவை மறுமணம் செய்வதை பெரிதும் இன்றளவும் பின்பற்றவில்லை என்பதே உண்மையாகும்.

## பெண்களுக்கு சொத்துரிமை

உலகம் முழுவதும் பெரும்பாலும் தந்தைவழிச் சமுதாய அமைப்பே நெடுங்காலம் நிலவியது. அப்படிப்பட்ட அமைப்பில் பெண்களுக்கு சொத்துரிமை இருக்கவில்லை.

"எப்போது கணவன் - மனைவி அதற்கு ஒரு ஒழுங்கு கட்டுபாடு ஏற்பட்டிருக்க வேண்டுமென்றால், தனக்கெனச் சொத்து, நிலம், உடைமை தோன்றிய காலத்தில் தான்".... "தனி உரிமை ஏற்பட்ட பிறகு சொத்து சேர்க்கிறான்; தான் உயிருடன் இருக்கிறவரையில் அது அவனுடையதாக இருக்கிறது. அவன் இறந்த பிறகு அந்த சொத்து யாருக்கோ பயன்பட போகிறது; யாருக்கோ பயன்படப் போவதைவிட, தனக்குப்

பிறந்த குழந்தைக்கே பயன்பட வேண்டும் என்று மனிதன் சிந்தித்து - சந்தேகத்திற்கு இடமில்லாமல் தனக்கே பிறந்த குழந்தை என நிச்சயம் செய்யக்கூடிய ஒரு ஏற்பாடாகத்தான், கணவன் - மனைவி என்ற ஏற்பாடு செய்திருக்க வேண்டும். சொத்தில் இருந்து தான் இந்த முறை பிறந்திருக்க வேண்டும்.

(ஈ.வெ.இரா)

இத்தகைய சொத்துரிமை ஆண்களுக்கு மட்டுமே ஏற்றுக் கொள்ளப்பட்டது. பெண்களுக்கு உரிமை மறுக்கப்பட்டது. 1947இல் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் முன்மொழிந்த இந்து சட்டத் திருத்த முன் வரைவு 1956இல் முன்மொழியப்பட்டு, 17-6-1956இல் நிறைவேற்றப்பட்டது. நிறைவேற்றப்பட்ட இந்தச் சட்டத்திலும் பெண்களுக்குச் சொத்துரிமையில் சமமான அளவில் பங்கு அளிக்க வழி செய்யப்படவில்லை. இவற்றையெல்லாம் மீறிச் சொத்து உட்பட்ட அனைத்துத் துறைகளிலும் ஆணுக்கும் பெண்ணுக்கும் சம பங்கும், சம அனுபவிப்பு உரிமையும் வருவதென்பது பொதுவுடைமை அமைப்பிலேயே முடியும் என்பது பெரியாரின் முடிவான கருத்தாகும். (தமிழ்நாட்டு அரசினரால் 1989இல் பெண்களுக்கு சொத்தில் சமபங்கு கொடுப்பதற்கான சட்டம் நிறைவேற்றப்பட்டது).

## ஆணுக்கு பெண் சரிநிகர்

ஆணுக்கு பெண் சரிநிகர் என்னும் நிலை நேற்றோ, இன்றோ மனித குலத்தில் வாழக்கையின் எந்த நிலையிலும் எந்தக் கட்டத்திலும் எங்குமே இல்லை. இந்த நிலை ஏற்பட்டே தீரவேண்டும் என்பதில் ஈ.வெ.இரா. உறுதியாக நின்றார். இந்த நிலை ஏற்படுவதற்குத் தடையாக உள்ளவற்றை அவர் அடையாளப்படுத்தினார். அப்படி அவர் அடையாளப்படுத்திய கூறுகள் மூன்று. அவை கட்டாயக் குடும்பமுறை, தனிசொத்து, வாரிசு உரிமை என்பவை ஆகும்.

இவற்றுள் கட்டாயக் குடும்பமுறை என்கிற திருமண முறை ஒழிக்கப்படவேண்டும் என்பதில் அவர் உறுதியாக இருந்தார். அப்படி ஒழிக்கப்படுவதற்குத் தனிச் சொத்துரிமையும், வாரிசு உரிமையும் ஒழிக்கப்படவேண்டும் என்பதிலும் உறுதியாக விளங்கினார்.இம்மூன்று கூறுகளும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை.

இதனைப் பின்வரும் அவருடைய கருத்துகள் உணர்த்தும் "ஆணுக்கு பெண் சரிநிகர் ஆகும்; அடிமையில்லை. சோறு சமைத்து போடும் சோற்று ஆள் அல்ல பெண்; சமமானவள்; வாழ்க்கைத் துணைவி ஆவாள். இருவருக்கும் உரிமை ஒன்றே (பெரியார் ஈ.வெ.இரா சிந்தனைகள்" பக.230)

ஆண் - பெண் இருவருக்கும் உரிமை ஒன்றாக இருத்தல் வேண்டும் எனக் கருதிய அவர் ஒரு கட்டத்தில் தகப்பன் சொத்தில் ஆணுக்குப் போலவே, பெண்ணுக்கும் சரிபங்கு உண்டு என்பதனை வலியுறுத்தினார். தனிச்சொத்துரிமை உள்ள சமுதாயத்தில் சரிநிகர் உரிமை வர இதுவே வழியாகும் எனவும் கூறினார்.

மேலே கண்ட செய்திகளைக் கொண்டு, "தனிச் சொத்துடைமை உள்ள நாட்டில் பெண்களுக்கு உரிய விடுதலை வந்து சேராது" என்று பெரியார் கொண்ட கருத்தும் முடிவும் சரியானது என்பதை உணரமுடியும். பெண்விடுதலை என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் சரிநிகர் உரிமை ஒன்றே என்பது தான் பெரியாரின் சீரிய கொள்கையாகும்.

## முடிவுரை

"நாம் சுதந்திரமுள்ள மக்களாக வாழவேண்டுமானால், நம் ஆண்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அனைத்து சுதந்திரத்தையும் சலுகைகளையும் நம் பெண்மக்களுக்கு வழங்கி அவர்களுக்கு அவசியம் விடுதலை அளித்தல் வேண்டும்" ஆண், பெண் உரிமைகளைப் பற்றித் தந்தை பெரியார் தனது 16-ஆவது அகவையிலேயே (1895) சிந்திக்க தொடங்கியவர். அதன் விளைவாக பெண்களின் விடுதலைக்குத் தடையாகவும்; தளைகளாகவும் உலகத்திலும், இந்தியாவிலும் உள்ள எல்லாச் சமூகங்களிலும் நிலவுகிற

அனைத்து தடைகளையும் கண்டு அவை அனைத்தையும் நீக்க வேண்டுமென அவர் எழுதினார், பேசினார். இந்தச் சமூக - சமய சீர்த்திருத்தக்காரர்களை, உலகச் சமூகச் சீர்த்திருத்தக்காரர்கள் ஆகியோர் பெண் விடுதலைக்கான சில கூறுகள் அல்லது பல கூறுகள் பற்றிக் கூறியுள்ளதை நாம் காண்கிறோம். ஆனால் பெரியார் ஈ.வெ.இராமசாமி பெண்விடுதலை பற்றிய எல்லாக் கூறுகளையும் குறித்து சிந்தித்துத் தெளிவான கருத்தக்களை உலகுக்கு வழங்கிய சிறப்புக்கு உரியவராக விளங்குகிறார் என்பது ஓர் அரிய உண்மையாகும்.